OS No.449/2017

DW-2 –திருநாவுகரசு

த/பெ.

நாள். 09.03.2026

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி-2 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>

1.பிரதிவாதி பாரதி என் சகோதரி என்று சொன்னால் சரிதான். அவரும் வாதியும் காதலித்து திருமணம் செய்து கொண்டார்கள் என்றும் சொன்னால் சரிதான். அது 27.01.2000 ஆம் தேதி அன்று என்று சொன்னால் இருக்கலாம். அவருடைய திருமணத்திற்கு பின்பு சிறிது நாட்கள் எங்கள் இருவருக்கும் இடையே நல்ல போக்குவரத்து இருக்கவில்லை. சுமார் ஐந்து மாதங்கள் கழித்து எங்களுக்குள் உறவுகள் சுமூகமாகிவிட்டன.

2. என் அப்பா காவல்துறையில் கடைசியாக தக்கோலம் என்ற இடத்தில் பணியாற்றினார். என் அப்பா 2004 ஆம் ஆண்டில் பணி ஓய்வு பெற்று விட்டார். அவருடைய பணி பலன்கள் அனைத்தும் காவல்துறையில் அவருடைய கணக்கில் தான் வரவு வைக்கப்பட்டது என்றும் சொன்னால் சரிதான். 2004 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றதுதான் தெரியும் எந்த மாதம் என்று ஞாபகம் இல்லை என் தந்தையார் பணி ஓய்வு பெற்று ஒரு நான்கு ஐந்து மாதங்களில் அவருடைய பணப் பலன்கள் அனைத்தும் வந்துவிட்டது.

3. என் தங்கையான பிரதிவாதி பாரதி திருமணத்திற்கு முன்பு என் அக்காவின் வீட்டில் தான் இருந்தார் வேலைக்கு போவது கிடையாது. 2000 ஆம் ஆண்டில் திருமணம் முடிந்த பின்பு அவர் திருப்பூர் வந்து விட்டார். அதற்குப் பின்பு அவர் திருப்பூரில் வீரபாண்டி பிரிவு என்ற இடத்தில் குடியிருந்து வந்தார் ஆனால்

முகவரி தெரியாது. திருமணத்திற்கு பின்பு பிரதிவாதி வேலைக்கு போனாரா இல்லையா என்ற விவரம் எல்லாம் எனக்கு தெரியாது.

4. திருமணத்திற்கு மூன்று நான்கு மாதங்களுக்கு பின்பு என் தங்கை வேலைக்கு செல்ல ஆரம்பித்து விட்டார் எந்த கம்பெனிக்கு வேலை செய்தார் என்றெல்லாம் தெரியாது ஆனால் டெய்லரிங் வேலை செய்வார் என்று மட்டும் தெரியும். வாதியை விட்டு பிரிந்து வரும் வரை என் தங்கை எந்த வேலைக்கும் சென்றது கிடையாது என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் கணக்கு பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கம் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. என் தங்கைக்கு சீதனமாக 21 ஆயிரம் ரூபாயை 2001 ஆம் ஆண்டு என் அப்பா எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரியே தன்னுடைய வழக்குரையில் இதனை குறிப்பிடாத போது நான் 21,000 ரூபாயை 2001 ஆம் ஆண்டு கொடுத்ததாக சொல்வது வழக்கற்கான பொய்யான சாட்சியம் என்றால் சரியல்ல.

6.வாதிக்கு ரவிச்சந்திரன் மூலமாகத்தான் சொத்து வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தில் ரவிச்சந்திரன் சாட்சி கையெழுத்து செய்து இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். நானும் என் சகோதரியான பிரதிவாதியும் வாதி வேலைக்கு சென்று இருந்த சமயத்தில் வாதிக்கு சம்பந்தப்பட்ட துணிமணிகளையும் பொருட்களையும் எடுத்து சென்று விட்டோம் என்று சொன்னால் சரிதான். இது சம்பந்தமாக வாதி வீரபாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருந்தார் என்று சொன்னால் சரிதான் அதனைப் பெற்று அவருடைய பொருட்களை திருப்ப வாங்கி கொடுத்து விட்டார்கள் என்றும் சொன்னால் சரிதான்.

7. அதில் வாதியின் நகைகளை திருப்ப கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாரின் பண பலன்களைப் பெற்று பிரதிவாதி இந்த சொத்தை வாங்கி இருப்பதாக சொன்ன போதும் என் தகப்பனாரின் பண பலன்கள் எதையும் நாங்கள் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது வாதி தன்னுடைய சுய சம்பாத்தியத்தால் வாங்கிய சொத்து என்றும் சொன்னால் சரியல்ல. வாதி தன் மனைவி மீது பாசம் கொண்டு அவருடைய பெயரில் பெயருக்காக மட்டுமே தாவா சொத்தினை பதிவு செய்திருக்கிறார் என்றும் சொன்னால் சரியல்ல.

8. வாதி தாவா சொத்தை வாங்கும்போது பிரதிவாதி தன் சார்பாக எந்த விதமான பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதியை பிரத்தியவாதி திருமணம் செய்த பின்பு ஐந்தாண்டுகள் காலமாக எங்களுக்கும் பிரதிவாதிக்கும் எந்த விதமான போக்குவரத்தும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்காக நான் சொல்லும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து முழுவதும் பாதிக்கு பாதிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.